1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 49 திரு. பி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

49—

கோடிக்கரை வனவிலங்கு சரணாலயத்தின் பிரதான சோதனைச் சாவடியை மாற்றியமைத்தல்.

10096 — திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, கோடிக்கரை வன விலங்கு சரணாலயத்தின் பிரதான செக் போஸ்ட் உப்புத் தொழில் செய்யும் பகுதியில் இருப்பதால் உப்புத் தொழில் தொடர்பான வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்க நேர்வதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், செக் போஸ்டை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதிகோடிக்கரை வனவிலங்கு சரணாலயத்தின் பிரதான சோதனைச் சாவடியை மாற்றியமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

முற்பகல் 11–35

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு கருத்து இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த கேள்வி நேரத்தில் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவது சிறப்பாக இதற்கென்று பிரத்தியேகமாக ஒரு ஐ. எப். எஸ். அதிகாரியை நீங்கள் அனுப்பி ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் உங்களுக்கு தரப்பட்டிருக்கிற பதிலில் கூட பிரதானமாக அந்த செக் போஸ்டில் இருக்கின்றவர்களுடைய நலன் களில் மட்டும், ஒருசிலர் நலன்களில் மட்டும் அக்கறை வைத்து அந்த முடிவு எடுக்கப்பட்ட காரணத்தால் உங்களுக்கு அப்படி தரப்பட்டு இருக்கலாம். ஆனால் இன்றைக்கு 25 ஆண்டு காலத்தில் பெருகி வந்திருக்கின்ற இண்டஸ்ட்டிரிஸ்-தேவையில்லாமல் நூற்றுக்கணக்கான லாரிகள் அந்த

இடத்திலே சோதனையிடப்படுகின்றன. அந்த சரணாலய எல்லையிலே அது கிடையாது. வன வளம், வன வள பாதுகாப்பு 1972, ஒயில்டு லைப் ஆக்ட் இவைகளை நீங்கள் தீவிரமாக அமல்படுத்துவதில் எடுத்து இருக்கின்ற அக்கறையை உணர்ந்துதான் நான் நிச்சயமாக பேசுகிறேன். அதற்கு நீங்கள் ஆவன செய்வீர்களா? பிரத்தியேகமாக ஒரு அதிகாரியை அனுப்பி ஒரு சிறப்பு அறிக்கையைப் பெறுவீர்களா என்று இந்த நேரத்தில் உங்கள் வாயிலாக நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடிய மனிதர்களிடமிருந்து மனிதர்களையும் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. இந்த அரசு அதேபோல் கொடிய மனிதர்கள் இந்த விலங்குகளை அழிக்கின்றபோது அந்த மனிதர்களிடமிருந்து அந்த விலங்குகளைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை இந்த அரசுக்கு இருக்கிற காரணத்தால் தான் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று உங்களுடைய கருத்து இருந்தாலும் கூட அதை மாற்றுகின்ற உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கவேண்டுமென்று சொல்லவில்லை. சரணாலயத்தின் எல்லைக்குள் அதை கொண்டு வாருங்கள் என்று சொல்லு கிறேன். சரணாலயத்தை விட்டு வெளியே கொண்டு போய் செக் போஸ்டு வைத்து இருப்பதில் அர்த்தமே இல்லை. ஆனால் சரணாலயத்திலிருந்து வெளியேறுகின்ற எந்த வாகனமும் பல்வேறு வழிகளில் சென்று விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சரணாலயத்ினுடைய பெரிபெரி யிலேயே இருப்பது தான் பொருத்தமாக இருக்கும். அதனால் நான் மெத்த பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சிறப்பாக பிரத்தியேகமாக ஒரு ஐ. எப். எஸ். அதிகாரியை நீங்கள் அனுப்பி ஒரு அறிக்கையைப் பெறவேண்டுமென்று மீண்டும் பணிவன்போடு கேட்டு அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. ராயர்பாதம் என்ற இடத்திலே அந்த செக் போஸ்ட் இருந்தால் நலமாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள். இருந்தாலும் கூட முதலில் இருக்கின்ற செக் போஸ்ட்டிலிருந்து செல்வதற்கு 2, 3 பாதைகள் இருக்கின்றன. அந்த வனக் காடுகளுக்குள் செல்வதற்கு வன விலங்கு சரணா

லயத்திற்கு செல்வதற்கு உப்பளம் என்ற இடத்திலிருந்து செல்லலாம். அதிலே மண் சாலைகள் இருக்கின்றன. அதைப் போல பல்வேறு கிராமங்களுக்குச் செல்வதற்குப் பாதைகள் இருக்கின்றன. ஆகவே, அந்த வன விலங்குகளை அழிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று எங்களுடைய துறையின் சார்பாக அவர்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று மீண்டும் துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 56. திரு. ஏ. எம். பரமசிவன், இருக்கையில் இல்லை.

வினா எண் 51, திரு. ஆ. அறிவழகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

51—

மத்தகிரி காட்டுவாரி வாய்க்காலில் வெள்ளத்தடுப்பு சுவர் கட்டுதல்

9819— திரு. ஆ. அறிவழகன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை தாலுக்கா கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திலுள்ள மத்தகிரி காட்டுவாரி வாய்க்காலில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்ட அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. அறிவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1989 ஆம் ஆண்டு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் போது அப்போது இந்த வினா எழுப்பப்பட்டது. மீண்டும் நம்முடைய ஆட்சி வந்த பிறகு இந்த வினா எழுப்பப்